செய்தி வெளியீடு எண்: 533 நாள்:26.08.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.8.2019) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் வேலூர் மாவட்டம், கஸ்பா மற்றும் அரியூர் ஆகிய இடங்களில் 58 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே கடவில் கட்டப்பட்டுள்ள இரண்டு மேம்பாலங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், வேலூர் மாவட்டம், கண்டோன்மென்ட் – கணியம்பாடி இரயில் நிலையங்களுக்கு இடையில் கஸ்பா என்ற இடத்தில் 36 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் அரியூர் என்ற இடத்தில் 21 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம், என மொத்தம், 58 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே கடவில் கட்டப்பட்டுள்ள இரண்டு மேம்பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) திரு.எம்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9